(அ) ஆழ்வார் திருநகரியிலுள்ள சுகாதார நிலையத்தை மீண்டும் மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, ஆழ்வார் திருநகரியிலுள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மணிநாடார் (குறுக்கீடு)*

வினா எண் 131, திரு. சி. இராசேந்திரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

131—

ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

***2821—திரு. சி. இராசேந்திரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து ஈச்சங்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர், அந்தத் தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர் போன்றவர்களைக் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்

2002 ஏப்ரல் 12]

தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு மூலமாக ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பது தொடர்பாக, கோரிக்கையாக அரசுக்கு வருகிறபோது ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல் தொடர்பாகப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பது தொடர்பாக அரசிற்கு எவ்விதத் தகவலும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராசேந்திரன்.

திரு. சி. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாம் முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற, கழகத்தினுடைய காவல் தெய்வம், தமிழகத்தினுடைய ஒளிவிளக்கு, தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தினுடைய விடிவெள்ளியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற என்னுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிற திசை நோக்கி வணங்குகிறேன். கடந்த 1991-96 ஆண்டுகளில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றபோது, அன்றையதினம் ஒரத்தநாடு ஒன்றியத்தைப் பிரிக்க வேண்டும் என்று சொல்கிறபோது, பிரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதி ஒரு பெரிய தொகுதியாகும். தஞ்சை மாவட்டத்திலே ஒரு தொகுதியும் முழுமையான நிலையில் இல்லை. ஒரத்தநாடு ஒன்றியத்தில் 23 ஊராட்சிகளையும், தஞ்சை ஒன்றியத்தில் 33 ஊராட்சிகளையும், புதுக்கோட்டை மாவட்டத்தில் கறம்பக்குடி ஒன்றியத்தில் 4 ஊராட்சிகளையும் உள்ளடக்கிய தொகுதியாக இருக்கின்றது. இந்த ஒரத்தநாடு ஒன்றியத்தில் 58 ஊராட்சிகளும், தஞ்சை ஒன்றியத்தில் 60 ஊராட்சிகளும் இருக்கின்றன. இந்த இரண்டையும் ஒன்றாக இணைக்கின்ற இடம்தான் ஈச்சங்கோட்டை. அதை மையமாக வைத்துப் பிரிப்பதற்கு வேண்டிய வழிவகைகளை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இதைப் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் தங்கள் மூலமாகக் கேட்டு, செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

[2002 ஏப்ரல் 12

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளைப் பிரித்தல், அல்லது ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல் தொடர்பாகக் கடந்த 1999 ஆம் ஆண்டு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு மூலமாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பது தொடர்பாகப் பரிந்துரை செய்து, அரசுக்கு அனுப்பப்படுமேயானால், அது தொடர்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதைப் பொறுத்தவரை, ஒன்று சொல்ல விரும்புகிறேன். இப்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களும்கூட, இரண்டாக, மூன்றாகக்கூட பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழகத்திலேயிருக்கக்கூடிய சிற்றூராட்சிகளை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பழனிசாமி, பிரிக்கப்பட்ட மாவட்டங்கள் இணைக்கப்பட்டும் இருக்கின்றன.

திரு. ஜி. பழனிசாமி: அதையும் இணைத்துக் கொள்வோம். இணைக்கப்பட்டும் இருக்கின்றன. ஆனால், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் எல்லாம், 10 ஆயிரம் பேர், 15 ஆயிரம் பேர் இருக்கக்கூடியதும், அதே மாதிரி 60 ஊராட்சிகள், சிற்றூராட்சிகளைக் கொண்டிருக்கிற ஊராட்சி ஒன்றியங்களும் இருக்கின்றன. ஆகையினால், மக்களுடைய பணிகளை, திட்டங்களை நிறைவேற்றுவதிலே ஏற்படுகிற காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு ஏற்கெனவே 1991-லேயும், 1992-லேயும் அமைக்கப்பட்ட குழுவினுடைய சிபாரிசுகளை, இடைக்காலமாக அன்றைக்கு இருந்த அரசு நிறுத்தி வைத்திருக்கிறது. மீண்டும் அந்தக் குழுவின் சிபாரிசுகளை அமல்படுத்துவதற்கு அரசு உத்தரவிடுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2002 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமனம் செய்யப்படுகிற ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள் போன்றவர்களால் அமைக்கப்பட்ட குழு மூலமாக ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பது தொடர்பாகப் பரிந்துரை செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்படுமேயானால், அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பன்னீர்செல்வம், நீங்கள் கேட்கிற கேள்விக்கும் அமைச்சர் சொன்ன பதில்தான் பொருந்தும். அதைத்தான் சொல்லப் போகிறார் மறுபடியும். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சட்டமன்றத் தொகுதியில் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் பெருமத்தூர் ஊராட்சி கடந்தகால தி.மு.க. ஆட்சியில் பிரிக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு, அதற்குத் தனி அலுவலர் இதுவரை நியமனம் செய்யப்படவில்லை. காரணம், தேர்தல் நெருங்கியதால் அது முடியாமல் போய்விட்டது. இப்போது புதிய அரசு வந்துள்ள காரணத்தால், பெருமத்தூர் ஊராட்சிக்குத் தனி அலுவலர் நியமனம் செய்து, அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்ற கேள்வியை உங்கள் மூலமாகக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது தொடர்பாகச் சொல்கிறேன். ஊராட்சியாக இருந்தாலும், பேரூராட்சியாக இருந்தாலும், தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பிறகு, தனி அலுவலர்கள் பொறுப்பு வகிக்கமாட்டார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் செயல்படுவார்கள். எனவே, இது தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால், அதற்குத் தக்க விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 132, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.